# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு மற்றும்
# முன்னாள் பள்ளி முதல்வர் நினைவு பெயர் சூட்டல் விழா

நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலூக்கா கேத்திப் பேரூராட்சிக்குட்பட்ட லைடுலா நினைவு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜூனியர் காலேஜ் என்ற பழமை மற்றும் பாரம்பரியம் மிக்க பள்ளி சுமார் நூற்றுப்பத்து ஆண்டு களாக கல்விச் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இருபால் மாணவர்கள் இப்பள்ளியில் படித்து பயனடைந்து வருகின்றனர். இப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று நாட்களும் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு முக்கிய விழாப் போல விமரிசையாக கொண்டா டப்படுகிறது.

இவ்வாண்டும் மிக முக்கிய நிகழ்வாக ஜூலை மாதம் 12-07-2024 வெள்ளிக்கிழமை காலை 11:30 மணியளவில் இப்பள்ளியில் முப்பது ஆண்டுக்காலம் பள்ளி முதல்வராக பணியாற்றி பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரும், தற்பொழுது நம்மிடையே இல்லாமல் இறைவனடி சேர்ந்தவருமான முன்னாள் பள்ளி முதல்வர் திரு. W.R. கார்டனர் பெயரில் பள்ளி அலுவலக கட்டிடத்திற்கு W.R. Gardener Block என்று பெயர் சூட்டப்பட்டு நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி M.அருணா இ.ஆ.ப. தமது கைப்பட பெயர் பலகையை திறந்து வைத்தார். பிறகு அவர் பேசும்போது தான் தனியார் விழாக்களுக்கு அதிகம் கலந்து கொள்வதில்லை என்றும் ஆனால் இன்று இவ்விழா மிகச் சிறப்பாக உள்ளதென்றும் மேலும் முன்னாள் மாணவர்கள் மற்றும் இந்நாள் மாணவர்கள் கலந்துரையாடுவது பள்ளியின் வளர்ச்சிக்கு மேலும் உயிரோட்டமாக இருக்கும் என்றும் மிகச் சிறப்பாக பேசினார்.

மேலும் இவ்விழாவில் பள்ளியின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் மற்றும் நிர்வாகிகள் அதேபோல் முன்னாள் மாணவர் அமைப்பு தலைவர் மற்றும் முக்கிய நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். குறிப்பாக முன்னாள் பள்ளி முதல்வரின் மனைவி திருமதி: ஜோன் கார்டனர் மற்றும் அவர் குடும்பத்தார் கலந்து கொண்டனர்.